ஓவியம் : ரவி பேலட்

## அலையாத்திக் காடுகளும் தமிழும்...



சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும் கால நிலை மாற்றத்தினை எதிர்கொள்வதற்கு, புதிய முன்னெடுப்புகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளதை, அரசின் திட்டங்களைக் கவனித்து வருபவர்கள் அறிவர். அவை, சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருவதைப் பறைசாற்றுகிறது 'தமிழ் வாழ்க' அலையாத்திக் காடுகள் அமைப்பு.

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை கடலோரப் பகுதிகளில் பரந்து விரிந்துள்ளன அலையாத்திக் காடுகள். ஆற்று நீரும், கடல் நீரும் கலக்கும் பகுதியில் குறைந்த உப்புத்தன்மை உள்ள பகுதிகளில் வளரும் மரங்கள் கொண்டவை இந்த காடுகள். கடல் அலையின் வேகத்தையும் காற்றின் வேகத்தையும் கட்டுப்படுத்தும் தன்மை கொண்டதால் 'அலையாத்தி காடுகள்' எனப்படுகின்றன.

கடந்த 2004-இல் 'சுனாமி', 2008-இல்'நிஷா' புயல் மற்றும் 2018-இல் 'கஜா புயல்' இவற்றின் கோரத் தாண்டவங்களில் இருந்து அப்பகுதிக் கடலோர மக்களைக் காத்தவை, சதுப்பு நிலக் காடுகள் பல்வேறு வகையான வெளிநாட்டுப் பறவை இனங்களுக்கும் இந்தக் காடுகள் அடைக்கலம் தருகின்றன. இந்தக் காடுகளின் தேவை காரணமாக, கடலோர சதுப்பு நிலங்களில், இவை உருவாக்கப்படுகின்றன.

அந்த வகையில், முத்துப்பேட்டைப் பகுதியில் 50 ஹெக்டேர் பரப்பில் உருவாக்கப்பட்டுள்ள அலையாத்திக் காடுகளில், 'தமிழ் வாழ்க' எனும் சொற்களின் வடிவில் வாய்க்கால் வெட்டப்பட்டுள்ளது. 9 ஹெக்டேர் பரப்பில் 3 ஆயிரத்து 962 மீட்டர் நீளத்தில் இந்த வாய்க்கால்கள் அமைந்துள்ளன. அலையாத்திக் காடுகள் உருவாக்கப்படும்போது பொதுவாக வடிவமைக்கப்படும் மீன் முள் வடிவ வாய்க்காலைத் தவிர, 'தமிழ் வாழ்க' எனும் இந்த வாய்க்கால்களும் அமைக்கப்பட்டுள்ளது.

அடுத்து 3 முதல் 5 வருடங்களில் இந்தக் காடுகள் வளர்ந்த பின்பு, 'தமிழ் வாழ்க' எனும் பெயரில் தனித்துவமான அடையாளம் கொண்டிருக்கும். ஏற்கெனவே முத்துப்பேட்டை அலையாத்திக் காடுகளும் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து வரும் நிலையில், 'தமிழ்' காடும் புதிய சுற்றுலா வாய்ப்புகளை வழங்கும் என எதிர்பாரக்கலாம்.

## ஃப்ளாஷ்பேக்





எல்.எம். கருத்தப்புடையார்

### தளபதி தந்த உற்சாகம்!

1994-ஆம் ஆண்டு, அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும் இன்றைய கழகத் தலைவருமான மாண்புமிகு தளபதி அவர்கள், தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, கழக அமைப்புகளின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார். மணப்பாறை ஒன்றிய தி.மு.க.வின் பணிகளை ஆய்வுசெய்ய மணப்பாறை வந்திருந்தபோது, தளபதி அவர்களை மணப்பாறை ஒன்றியச் செயலாளர், வழக்கறிஞர் துரை.அழகிரி அவர்களுடன் சேர்ந்து வரவேற்று மகிழ்ந்தேன். கழகத் தொண்டர்களைத் தன்னுடன் புகைப்படம் எடுக்க தளபதி அவர்கள் அனுமதியளித்து, அனைவரையும் உற்சாகப்படுத்தினார்.

**– எல்.எம்.கருத்தப்புடையார், முன்னாள் கிளைச் செயலாளர், வடக்குசேர்பட்டி, கே.பெரியபட்டி ஊராட்சி, மணப்பாறை கிழக்கு, திருச்சி மத்திய மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### நீதிக்கட்சிக்கு உயிர் கொடுத்த பெரியார்!

1937-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், நீதிக் கட்சி தோற்ற நிலையில், புதிதாக அமைந்த காங்கிரஸ் ஆட்சி, இந்தியைத் திணிக்க முயன்றது. அப்போது சுயமரியாதை இயக்கத் தலைவராக இருந்த பெரியார் தலைமையில், நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டம் தமிழர்களிடையே பெரிய எழுச்சியை உருவாக்கியது. பார்ப்பனர் அல்லாதார் நலனில் அக்கறைக் காட்டி வந்ததால், நீதிக்கட்சியை ஆதரித்து வந்த பெரியார், பெல்லாரி சிறையில் இருந்தபடியே, நீதிக்கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்றார்.

## சீரணி → இளைஞர் அணி

27

**ந.வினோத்குமார்**

**தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் 'சீரணி முதல் இளைஞர் அணி வரை'...**



# சீரணி தந்த சத்துணவு!

உலகமே புகழும் சத்துணவுத் திட்டத்தை செயல்படுத்தியது, எம்.ஜி.ஆர். என்கிற எண்ணமே பலருக்கும் உள்ளது. ஆனால், அந்தத் திட்டத்தை முதன்முதலாக 'சத்துணவுத் திட்டம்' என்ற அதே பெயரில் அறிமுகப்படுத்தியது, தி.மு.கழகம்தான் என்பது வரலாற்று உண்மை.

1971-ஆம் ஆண்டு பிப்ரவரி 1-ஆம் தேதியிட்ட 'தமிழரசு' இதழில் **'சீரணிப் பெருமை செப்பவும் பெரிதே'** என்ற தலைப்பில், வெளியான கட்டுரையின் சில பகுதிகள் இவை:

"சென்னை நகரில் காலையிலும், மாலையிலும் பேருந்துப் போக்குவரத்தில் அதிக நெரிசலின் காரணமாகப் பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளாவதைத் தடுக்கும் பொருட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட ஐம்பது பேருந்து நிலையங்களில் சீரணித் தொண்டர்களை நிறுத்தி, பேருந்தில் ஏறும் பொதுமக்களை வரிசைப்படுத்தி, பொதுமக்களுக்கு வசதி செய்து தருகிறார்கள். இதன் காரணமாகப் பேருந்துகள் குறித்த காலத்தில் வருவதுடன், இடநெருக்கடி இல்லாமலிருக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

அடுத்து, சென்னை நகரில் சேரி வாழ் மக்களின் குழந்தைகள் நல்ல ஊட்டச் சத்தில்லாமல் உடல்நலம் குன்றியிருப்பதை எல்லோரும் அறிவோம். இக்குறையினைப் போக்க, தமிழக முதல்வர் அவர்களின் பெரு முயற்சியால், மூன்று வயதிற்கு உட்பட்ட இளம் குடிசை வாழ் சிறார்களுக்குச் சத்துணவு வழங்கும் பொறுப்பினைச் சீரணித் தொண்டர்கள் ஏற்று, இதுவரை 60 ஆயிரம் குழந்தைகளுக்கும் மேலாக சத்துணவு, வாரத்தில் ஐந்து நாட்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தைச் சீரணியின் தொண்டுள்ளத்தோடு மிகவும் நல்ல முறையில் செயல்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும்" என்று கூறுகிறது அந்தக் கட்டுரை.

சீரணி என்பது தி.மு.க. கட்சி சார்ந்த அமைப்பு, என்ற எண்ணத்தை உடைக்கும் விதமாக, இன்னொரு பணியும் மேற்கொள்ளப் பட்டது. அது:

"மயிலை கபாலீஸ்வரர் கோயிலின் தெப்பக்குளத்தில் தூர் எடுக்கும் பணியைச் சீரணியினர் மேற்கொண்டனர். தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் இதனைத் துவக்கி வைத்தார்கள். இதன் மூலம் ஆத்திகப் பெருமக்களின் பாராட்டுதல்கள் தமிழக அரசுக்கும், சீரணி அமைப்பிற்கும் கிடைத்தன".

**கோட்டூரில் சீரணித் தொண்டர்களும் உள்ளூர்ப் பொதுமக்களுமாக 25 ஆயிரம் பேர் சேர்ந்து, ஒரே நாளில் எட்டு மைல் நீளமுள்ள சாலையை அமைத்தனர்.**

அந்தக் கட்டுரை சொல்லும் சீரணியினர் செய்த வேகமான மேலும் சில சாதனைகள் இவை...

"புதுக்கோட்டை வட்டத்தில் உள்ள குடுமியான்மலை விவசாயப் பண்ணையில் நிலத்தைப் பண்படுத்தும் வேலையில் ஈடுபட்டதில், புதையுண்டு கிடந்த ஒரு குளத்தையே சீரணியினர் கண்டுபிடித்தனர். அதைச் சீர் செய்ததில் சுமார் 45 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்ற பான்மையை, தமிழக ஆளுநர் அவர்களே, தனது வருகையின்போது கண்டுகளித்துப் பாராட்டினார்கள்.

அண்ணல் காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, கோவை மாவட்டத்தில் உள்ள கோட்டூரில் சீரணித் தொண்டர்களும் உள்ளூர்ப் பொதுமக்களுமாக 25 ஆயிரம் பேர் சேர்ந்து, ஒரே நாளில் எட்டு மைல் நீளமுள்ள சாலையை அமைத்தனர்.

திருச்சி-இராமநாதபுரம் மாவட்டங்களிலிருக்கும் வார்ப்பட்டு - ஓரத்துப்பட்டு கிராமங்களை இணைக்கும் மூன்று மைல் நீளமுள்ள சாலை, 10-1-1989 அன்று, 3 ஆயிரம் சீரணித் தொண்டர்களால் ஒரே நாளில் அமைக்கப்பட்டது".

இவ்வாறு தமிழ்நாடு, திராவிட இயக்க அரசியல் வரலாற்றின் முக்கியமான முன்னெடுப்பைப் பதிவு செய்துள்ளது 'தமிழரசு'..!

...வெற்றிநடை போடும்.

## பொய்ப்பெட்டி

27


**கோவி.லெனின்**

**"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."**

# கோமியக் கொள்கையாளர்களுக்குப் புரியாது!

**"முதலீடுகளை ஈர்ப்பதற்காக, அமெரிக்காவுக்கு ஏன் முதலமைச்சர் போக வேண்டும்? அந்த நிறுவனங்களின் நிர்வாக அலுவலகங்கள் தமிழ்நாட்டில் இருக்கும்போது இங்கேயே முதலீடுகளைப் பெற்றிருக்கலாமே" என்று கேட்கிறார்களே, பா.ஜ.க.வினர்?**

இந்திய ஒன்றியப் பிரதமர் நரேந்திரமோடி எதற்காக 60 தடவைகளுக்கு மேல் வெளிநாடுகளுக்குப் பயணித்தார். அவர் சென்ற நாடுகளின் தூதரகங்கள் எல்லாம் இந்தியாவில் இருக்கும்போது, 'தூதரகங்களிலேயே எல்லாவற்றையும் பேசியிருக்கலாமே' என்று கேட்டால், அது எந்தளவு முட்டாள்தனமாக இருக்குமோ, அப்படித்தான் பா.ஜ.க.வினர் தமிழ்நாட்டு முதலமைச்சரின் அமெரிக்கப் பயணம் பற்றிக் கேட்பதும் உள்ளது. பன்னாட்டு நிறுவனங்கள் பலவற்றின் நிர்வாக அலுவலகங்கள் சென்னையில் இருப்பதற்கு காரணமே, முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக் காலத்து தொழிற்கட்டமைப்புதான். நடுவில் தொய்வடைந்த தொழில்துறையைக் கடந்த மூன்றாண்டுகளில் நேர்செய்து, **'முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு'** என்ற நிலையை உருவாக்கியிருப்பவர், தமிழ்நாட்டின் இன்றைய முதலமைச்சர். பன்னாட்டு நிறுவனங்களின் அலுவலகங்கள்-தொழிலகங்கள் இங்கே இருந்தாலும், அவை சார்ந்த புதிய முதலீடுகள், விரிவாக்கங்கள், அவை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஆகியவை குறித்து முடிவெடுக்க வேண்டியவை அந்தந்த நாட்டில் உள்ள அந்நிறுவனங்களின் தலைமை அலுவலகங்கள்தான்.







**தமிழ்நாட்டிற்கு முதலீடு, தமிழ்நாட்டில் வாழ்பவர்களுக்கு வேலை வாய்ப்பு என்பதை 'கூகுள்' தொடங்கி, 'ஓமியம்' வரையிலான அமெரிக்க நிறுவனங்களுடனான ஒப்பந்தங்கள் உறுதி செய்துள்ளன.**

கூகுள், மைக்ரோசாஃப்ட், ஆப்பிள் உள்ளிட்ட கணினி சார்ந்த புகழ்பெற்ற நிறுவனங்கள் அமெரிக்காவில் உள்ளன. கார், மின்சாரம் உள்ளிட்ட உற்பத்தி சார்ந்த நிறுவனங்களும் அங்கு உள்ளன. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறை சார்ந்த நிறுவனத் தலைமையகங்களும் அங்கு இருக்கின்றன. அந்தந்த நிறுவனங்களின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களைச் சந்தித்து, இந்தியாவில் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டில் தொழில்களைத் தொடங்குவதற்கு எத்தகைய வசதிகள் கூடுதலாக உள்ளன, எந்தளவுக்குத் தமிழ்நாட்டில் மனிதவளம், பெண் பணியாளர்கள் எண்ணிக்கை உள்ளது என்பதை எடுத்துக் கூறும்போதுதான் அந்த நிறுவனங்கள், புதிய முதலீடுகளுக்கும், விரிவாக்கத்திற்கும் ஆயத்தமாகும். புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்.

முதலமைச்சர் தன்னுடைய அமெரிக்கப் பயணத்தில் அதனைச் சாதித்து வருகிறார். தமிழ்நாட்டிற்கு முதலீடு, தமிழ்நாட்டில் வாழ்பவர்களுக்கு வேலை வாய்ப்பு என்பதை 'கூகுள்' தொடங்கி, 'ஓமியம்' வரையிலான அமெரிக்க நிறுவனங்களுடனான ஒப்பந்தங்கள் உறுதி செய்துள்ளன.


'கோமியமே கொள்கை' என்று வாழ்கிற கட்சிக்காரர்களுக்கு, இது அத்தனை எளிதாகப் புரியாது.

...வினா தொடரும்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

592

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்





-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131